

தாய்மொழி | முயற்சி - பயிற்சி - வெற்றி | **நேரம்:- 01.00 மணி**

01.புத்திரன் என்பதன் எதிர்பால் சொல்?

1) புத்திரை 2) புத்திரனி 3) புத்திரி

02. சமுத்திரம் என்பதன் ஒத்த சொல்?

1) ஆறு 2) குளம் 3) பரவை

03. மேதினி என்ற பதத்தின் கருத்து?

1) கொடுத்தார் 2) அறநூல் 3) பூமி

04. புகையிலை என்ற சொல்லுக்குரிய கூட்டத்தை குறிக்கும் சொல்

1) கட்டு 2) சிப்பம் 3) படை

05. சினம் - கோபம் என்பது போல

1) அழகு - கவின்
2) திருவள்ளுவர் - திருக்குக்குறள்
3) நடிகள் - நடிகை

06. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பிறந்த ஆண்டு

1) 8718 2) 1878 3) 1788

07. பாற்குடமுஞ் சுமந்து
பையப்பைய நடந்து.....

1) பாலையின்று விற்பேன்
2) காசைப்பையில் வைப்பேன்
3) சந்தைக்கு போகும்போது

08. பெண் என்ற சொல்லின் ஒத்த கருத்தாக அமையாதது?

1) தையல் 2) மாது 3) தாய்

09. பவளக்கொடி எதை விற்று வாழ்ந்து வந்தாள்?

1) தயிர் 2) மோர் 3) பால்

10. பாடசாலையில் என்பதன் பன்மை சொல்?

1) பாடசாலையின் 2) பாடசாலைகளில் 3) பாடசாலையினது

www.lkedu.lk

02. சரியான விடை தருக?

1. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

   1. தாள் + காசு = ...
   2. கல் + குவியல் = ...

2. பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.

கடுகு சிறிதானாலும் காரம் பெரிது .....

.....

3 . பின்வரும் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

அரசன் அரண்மனைக்கு சென்றான். .....

4. கீழ்வரும் சொற்களை ரகர, றகர வேறுபாடுகளை அனுசரித்து கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1. இரை :- .....
2. இறை:- .....

5. பக்சைக்கிளி வெண்டிக்காயைத் தின்றது. என்ற வாக்கியத்தில் உள்ள எழுவாய் அடைமொழிச் சொல்லை எழுதுக.

.....

6. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

1. ரோஜாப்பூக்கள் வாசனை.....(மிக்கது, மிக்கவை)
2. பிள்ளைகள் வரிசையாக வாருங்கள் என அதிபர் .....
   (கூறுவார், கூறினார்)
3. கோழிகள் முட்டை இட்டு குஞ்சு .....
   (பொரித்தது, பொரித்தன)

7. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

1. ரவி மூச்சுப் பேச்சின்றி இருந்தான். மூச்சுப் பேச்சின்றி என்பதன் பொருள் ..... (பேச்சற்ற நிலை / அவசரநிலை)
2. விவசாயி அல்லும் பகலும் உழைத்தான். அல்லும் பகலும் என்பதன் கருத்து ..... (தினமும் / காலையும் மாலையும்)
3. பாம்பைக் கண்ட கஜன் கண்ட துண்டமாக வெட்டினான் . கண்ட துண்டம் என்பதன் கருத்து .....
   (பாதி பாதியாக / துண்டு துண்டாக)

www.lkedu.lk

8. தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக ?

கண்ட கண்ட இடத்தில் எச்சில்
துப்பக் கூடாது- நாம்
காலை வைத்து மிதித்து அதில்
நடக்கக் கூடாது.
எச்சிற் தொட்டி எதற்கு இருக்கு
மறக்கக் கூடாது
எந்த நோயும் ஒண்ட இடம்
கொடுக்கக் கூடாது.
குப்பை பெருக்கித் தொட்டியிலே
கொட்டிட வேண்டும்- நாம்
குடும்பத் தூய்மை காப்பதிலே
முந்திட வேண்டும்.

குளித்து நாளும் துப்பரவாய்
இருந்திட வேண்டும் - நாம்
கலகலப்பாய்ப் பேசி நன்றாய்ச்
சிரித்திட வேண்டும்.
சோம்பல் தானே நோய்களுக்கு
முதல் படியாகும் - நமக்குச்
சுற்றுப்புறத் தூய்மை தானே
அடிப்படையாகும்.
ஒன்று பட்டு நாட்டைத் தூய்மை
ஆக்கிட வேண்டும் - நோயே
இல்லாமல் நாம்
நூற்றாண்டுகளவாழ்ந்திட வேண்டும்.

(கவிஞர் :- குழந்தை கதிரேசன்)

1. நாம் துப்ப வேண்டிய இடம் எது ? :- .....

2. நோய்கள் ஏற்படக் காரணம் யாது ? :- .....

3. குப்பைகளை எங்கே போட வேண்டும் ? :- .....

4. குடும்பத் தூய்மை காக்க நாம் செய்ய வேண்டியது ? :-

.....

5. ஒன்று பட்டுச் செயற்படுவதனால் ஏற்படும் மாற்றம் யாது ? :-

.....

6. இப்பாடலைப் பாடிய கவிஞர் யார் ? :- .....

9. விடை தருக?

1. உமக்குத் தெரிந்த அறிவித்தல் ஒன்றை எழுதுக ?.

.....

2. உமக்குத் தெரிந்த அறிவுறுத்தல் ஒன்றை எழுதுக. ?.

.....

3. உமக்குத் தெரிந்த கட்டளை ஒன்றை எழுதுக. ?.

.....

4. உமக்குத் தெரிந்த அறிவுரை ஒன்றை எழுதுக. ?.

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.lkedu.lk

10. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் எனவும் பிழையாயின்எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாம் இடுக.

1) ஓநாயைக் கண்ட மான் வேகமாக ஓடியது. (.....)

2) பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் மலர்ந்தது. (.....)

3) நான் அழகிய காட்சிகளை வரைவேன். (.....)

4) சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் போன்றது. (.....)

5) பாடலை ஒவ்வொரு வரியாகப் பாடிக் காட்டுங்கள் (.....)

11. கீழ் வரும் படத்தை அவதானித்து நிகழ்கால வடிவத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக? ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆகக் குறைந்தது ஐந்து சொறகளாவது இருத்தல் வேண்டும். அத்துடன் எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இடம் பெறுதல் வேண்டும்.



1. .....

.....

2. .....

.....

3. .....

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---